ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. நவம்பர், 1942 நெ. 8.

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. விப்பன்ன, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.

1. தலையங்கம்.—

*நிலவரி சலுகைகள்* ... ... 297

2. கிராம அபிவிருத்தி—R. காலெடி, M.A., I.C.S. ... 300

3. இந்திய ஆகார நிலைமையைப்பற்றி ஸர். ஜோகேந்திர சிங் ... 305

4. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... ... 311




கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை,

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்,

# The Village Panchayat Journal.

VOL. V] NOVEMBER, 1942. [No. 8.

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

---

## Land Revenue Concessions.

There is a strong rumour that the Government may not renew the Revenue concession of 75 lakhs which they have been giving ever since the last Settlement. This rumour gains strength by the fact that Government has so far not announced the concession which they used to do by now. The Kist collections begin in January 1943.

The Land Revenue concessions were started in 1932-33. Late Sir K. V. Reddi Naidu, when he was the interim Minister, claimed credit for a possible permanent reduction of land revenue to the extent of 75 lakhs. A committee was appointed and submitted its report. What happened to it, it is not known. The Administration report for 1936-37 stated that the Land Revenue Concession for fasli 1347 took the form of cancellation of the percentage enhancement imposed at the last resettlement. In 1937 when Congress took office it was stated that resettlements were abandoned altogether. Now probably the Government consider that the ryot was benefitted in 1941-42 by the steep rise in prices and will also be benefitted in 1942-43, when prices are bound to be high. This argument is not sound. Firstly it will not be quite correct to state that the ryots benefitted by the rise in prices of 1941-42. The ordinary ryot usually sells his crop soon after harvest in order to pay off the advances he got from the village money lender for cultivation expenses, family maintenance etc. Very soon after, the Kist collection comes when he sells away the balance of paddy he has, so much so he does not even have paddy for his consumption, with the result he engages himself in Cooli work. This is generally the case with all middle class ryots whose holdings on an average range between Ac. 3 — to 10. The rich land Lord ryot who owns Ac. 100 and above is an exception. Paddy is harvested in circars and in many parts during the months of October to December. In districts which grow paddy during North East Monsoon paddy is harvested in April and May. Statistics in the possession of Government will demonstrate that the steep rise in the price of paddy was in July 1942. Till July 1942, the prices were the same as in June 1941. The difference in September 1942 prices is much more than in September 1941.

| | | Sept. 1938 | Sept. 1939 | Sept. 1940 | Sept. 1941 | Sept. 1942 |
|---|---|---|---|---|---|---|
| Telugu Districts | ... | 100 | 102 | 130 | 154 | 187 |
| Tamil Districts | ... | 100 | 104 | 113 | 130 | 226 |

| | | July 1942 | Sept. 1942 |
|---|---|---|---|
| Telugu Districts | ... | 140 | 187 |
| Tamil Districts | ... | 170 | 230 to 240 |

Secondly even if the theory of enhancement of land Revenue rates based on price levels be taken as a guiding principle, the rise in prices over a number of normal years is what should be considered. The rise in prices during a couple of years of War, after a devastating economic depression spread over a decade, would be a most hopeless criterion to apply. The rise in prices for 1941-42 did not benefit the ryot. The rise in prices for 1942-43 which will benefit the ryot will be after all for one year. Thirdly, after all, the war may end much sooner than is thought of and who knows as a result of its after-effects depression may not follow.

Again there is an important aspect to be considered. It should not be forgotten that the rise in prices is not confined to Agricultural produce, but covers all articles of consumption which a ryot does not produce. In the case of non-Agricultural produce the rise in prices is very much higher. This means that cost of living of the Agriculturist has risen, very much counter balancing the rise in price of Agricultural produce. The high cost of Agricultural implements, artificial manure, including caster cake, and that the cost of clothing have virtually nullified the rise in the price of Agricultural produce. The ryot is a loser and not a gainer. The large income he is supposed to derive does not appear to be real.

There is yet another aspect. At a time when the "GROW MORE FOOD" campaign is pushed with such vigour, the ryot naturally asks why he should grow enthusiastic over it, if the little he may be able to make by growing more food should be taken away in the form of enhanced revenue payment. The ryot may naturally ask whether the propaganda is due to the fact that the Government wants to cancel the concession and raise more revenues. AS SIR JOGENDER SINGH emphasised the ryot must be given every inducement heartily to co-operate in the national effort. Any control of prices that may not assure him a fair return or levy of additional taxation, be it a rise in the land Revenue, should be carefully avoided.

The people wanted a reduction of Land Revenue because the assessment rates were high and to give a Permanent Relief to the Ryot as Agriculture was not always remunerative.

HIS EXCELLENCY THE GOVERNOR and his ADVISERS have been keeping to popular policies hitherto inaugurated and we do believe that in this respect also they will continue to do so, especially when the Government requires the good will of the ryot and his joining the Government in the NATIONAL EFFORT to defeat the ENEMY. Any decision not to repeat the Land Revenue concessions which the ryot has been thinking is a permanent thing, is bound to be unpopular. It is not as if the Revenues have fallen. The sales-tax has brought in a large Revenue. The Ryot who is also the largest consumer is paying this tax indirectly. It is true Government want money to prosecute the WAR. The ryot has contributed to the WAR FUND generously.

# சந்தாதார்களுக்கு வேண்டுகோள்.

இப்போது வருஷத்தில் 8 மாதம் கழிந்துவிட்டது. அநேக பஞ்சாயத்து களிடமிருந்து சந்தா தொகை பாக்கி யிருக்கிறது. காகிதத்தின் விலை மிகவும் அதிக மாகிவிட்டதால், பாங்கில் இருக்கும் கையிருப்பு தொகை குறைந்து வருகிறது. ஆகையால் பாக்கி யிருக்கும் எல்லா பஞ்சாயத்துகளையும் 15-12-1942க்குள் சந்தா தொகையை அனுப்பும்படிக்கு கேட்டுக்கொள்ளுகிறோம்.

15-12-1942க்கு பின், சந்தாவுக்காக வி. பி. அனுப்ப உத்தேசித்திருக்கி றோம். பஞ்சாயத்து பிரசிடெண்டுகளை வி. பி.யை பெற்றுக்கொள்ளும்படி கேட் டுக்கொள்ளுகிறோம். தபாலாபீசில் வி. பி.யை 7 நாட்கள் வைத்திருந்து, அப்படி யும் பெற்றுக்கொள்ளாவிட்டால், எங்களிடம் திருப்பி அனுப்புகிறார்கள். இதனால் சங்கத்திற்குதான் தபால், வி. பி. செலவு நஷ்டமாகும். ஆகையால் இந்த சொற்ப தொகையான 3 ரூபாயை தயாராக வைத்து, வி. பி. வந்தவுடன் பெற்றுக்கொள் ளுங்கள்.

(கையொப்பம்)

வி. விய்யன்னு,

பொது காரியதரிசி.

# பஞ்சாயத்து போர்டுகளுக்கு வேண்டுகோள்.

விவசாயிகளின் நன்மையை பாதிக்கும் விஷயத்தைக் குறித்து அ. து. நிலத்தீர்வையில் சலுகைகளை மேற்கொண்டு காண்பிக்கும் விஷயமாக தீர்மானிக்க கீழ்கண்ட வினாக்களுக்கு விடைகள் அனுப்பினால் அதனால் கிடைக்கும் கணக்கு மூலம் தீர்மானிக்க சௌகர்யமாக இருக்கும்.

ஆகையால் கீழ்கண்ட வினாக்களுக்கு சரியான பதில்களை அவரவர்கள் கிராமத்தில் இருக்கும் நிலமையை குறித்து எழுதி எனக்கு 15-1-1943க் குள் சேரும்படி அனுப்பவேணுமாய் எல்லா பஞ்சாயத்து போர்டு மெம்பர் களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. உங்கள் கிராமத்தில் நெல் அறுவடை, முதல் போகம், இரண்டாம் போகம், எப்போது?
2. விவசாயிகள் தங்கள் தேவைக்கு சாதாரணமாக எவ்வளவு நெல்லை தங்க ளிடத்தில் நிறுத்திக்கொள்ளுகிறார்கள்? எவ்வளவு சத விகிதம் விவ சாயிகள் நெல்லை தங்கள் சொந்த உபயோகத்திற்கு சேகரித்து வைத்துக்கொள்ளுகிறார்கள்?
3. எவ்வளவு நெல் விற்கப்படுகிறது, எப்போது?
4. எவ்வளவு விவசாயிகள் (எண்ணிக்கை கொடுக்கவும்) பின்னிட்டு விலை அதிகரிக்கும்போது லாபத்திற்கு விற்பதற்காக நெல்லை சேகரித்து வைத்துக்கொள்ளுகிறார்கள்.
5. 1941 டிசம்பர், 1942 மார்ச்சு, மே, ஜூன், செப்டம்பர் இந்த மாதங் களில் நெல் என்ன விலைக்கு விற்கப்பட்டது?
6. பயிர் செய்யும் செலவில் ஏதாவது அதிகரிப்பு உண்டா? எந்த இனத் தில், எப்போதிருந்து அதிகம்?
7. ஜீவன செலவு எவ்வளவு அதிகரித்திருக்கிறது? எந்த எந்த இனங் களில்?

# ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா அக்ராசனத்தின் கீழ் 1-11-1942ல் நடந்த ஜனரல்பாடி கூட்டத்தின் நடவடிக்கைகள்.

---

1. 1-11-1942 வரையில் சங்கத்தின் வேலையைப்பற்றி பொதுகாரியதரிசிகள் சமர்பித்த யாதாஸ்து அங்கீகரிக்கப்பட்டது.

2. பஞ்சாயத்து மசோதாவைக் குறித்து பொது காரியதரிசியின் பொர்சுகள் தெரிவிக்கப்பட்டன.

3. உபவிதிகளில் திருத்தம்.

உபவிதி—12 கோரம்

| | | | | |
|---|---|---|---|---|
| | தற்சமயம் | 50 | திருத்தப்பட்டு | 25 |
| 22 | போர்டு | 12 | — | 8 |
| 30 | — | | பொது காரியதரிசி, என்று சேர்த்துக்கொள்ளவும். | |

4. நிர்வாகஸ்தர்கள் தேர்தல்.

அடியில் குறிப்பிட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1. தலைவர்.

ஸ்ரீ டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

2. உபதலைவர்.

ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா, எம்.எல்.ஏ.
ஸ்ரீ என். சத்யநாராயணா
ஸ்ரீ எம். சிவராவ்.

3. பொதுக் காரியதர்சி.

ஸ்ரீ வி. வியன்னா, பி.ஏ., பி.எல்.

கூட்டுக் காரியதரிசிகள்.

ஸ்ரீ லிங்கண்ண கௌட், பெல்லாரி
ராவ் சாகிப், எல். என். பரமசிவம் பிள்ளை.

4. நிர்வாக கமிடி அங்கத்தினர்கள்.

1. அசிர் கோவில் பிள்ளை
2. ஜி. ஹரிசர்வோத்தம ராவ்
3. கே. சுந்தரராம ரெட்டி
4. கே. எம். சிங்காரவேலு முதலியார்
5. ஜி. அலகிரிசாமி நாயுடு
6. ஆர். பக்தவத்ஸலம்
7. கே. எம். மருடபதி
8. இ. கிருஷ்ணமூர்த்தி கௌண்டர்
9. எம். ராமகிருஷ்ண ரெட்டியார்
10. பி. பி. திருமலை நாயுடு
11. என். வெங்கடரத்தினம்
12. ஐ. சத்தியநாராயணா
13. வி. பூர்ணசந்திரய்யா
14. எம். டி. தியாகராஜ பிள்ளை

அடியில் கண்டவர்கள் நிர்வாக போர்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 5 | நவம்பர், 1942. | No. 8

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

## தலையங்கம்.

### நிலவரி சலுகைகள்.

சென்ற சில வருஷங்களாக கொடுக்கப்பட்டுவரும் 75 லக்ஷம் ரூபாய் நிலவரி வஜாவை கவர்மெண்டார் மேலும் கொடுக்கமாட்டார்கள் என்ற வதந்தி உலாவி வருகிறது. ஜனவரி 1943ல் கிஸ்து வசூல் செய்யவேண்டியிருக்க, இதுவரையில் அதைக்குறித்து ஒரு அறிக்கையும் கவர்மெண்டார் விடாமலிருப்பதிலிருந்து இந்த சந்தேகம் ஊர்ஜிதமாகிறது.

இந்த நிலவரி வஜா 1932-1933ல் ஆரம்பித்தது. காலஞ்சென்ற சர் கே. வி. ரெட்டி நாயுடு முதல் முதல் நிலவரியில் நிரந்தரமாக 75 லக்ஷம் குறைவு படுத்தவேண்டும் என்று முதல் முதல் தீர்மானித்தார். அதற்காக ஒரு கமிடி ஏற்பட்டு, ஒரு யாதாஸ்தை சமர்பித்தது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. 1936-1937 வருஷத்திய கவர்மெண்டு நிர்வாக யாதாஸ்தில் முந்தின செட்டில்மெண்டில் விதிக்கப்பட்ட அதிகப்படி சத விகித வரி 1347 பசலியில் ரத்து செய்யப்பட்டு சலுகை காண்பிக்கப்பட்டது என்று கண்டிருந்தது. 1937ல் காங்கிரஸ் பதவி வகித்தபோது மறு செட்டில்மெண்டே ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தற்சமயம் கவர்மெண்டார், விவசாயிகளுக்கு 1941-1942ல் கிடைத்த அதிக விலையால் லாபம் ஏற்பட்டிருக்கும் என்றும் 1942-1943 வருஷத்திலும் அதிக விலையுண்டாகி லாபம் கிடைக்கும் என்றும் எண்ணலாம். இது சரியல்ல. முதலாவதாக 1941-1942ல் இருந்த அதிக விலைகளினால் விவசாயிகள் நன்மையடைந்தார்கள் என்று சொல்லுவது சரியல்ல. சாதாரணமாக

விவசாயி அறுவடையானவுடன் மாசூலை தான் கிராமத்தில் பட்டிருக்கும் கடன்களை திருப்பி கொடுக்க, விற்றுவிடுகிறான். பின்னிட்டு உடனே கிஸ்து வசூல்போது, மீதியிருக்கும் நெல்லை விற்றுவிடுகிறான். தனக்கு தேவையான நெல்லைக்கூட நிறுத்தி வைத்துக்கொள்ளுவதில்லை. ஆகையால் அவன் கூலி வேலை செய்து பிழைக்கவேண்டி யிருக்கிறது. 3 ஏகரா முதல் 10 ஏகரா வரையில் வைத்துக்கொண்டிருக்கும் எல்லா நடுத்தர விவசாயியின் கதி இப்படித்தான். 100 ஏகராக்கு மேல் உடைத்தாயிருக்கும் பணக்கார நிலச்சுவான்தார்கள் விஷயம் வேறு. சர்கார் பிரதேசத்திலும், மற்ற பிரதேசங்களிலும் நெல் அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் அறுவடை செய்யப்படுகிறது. வடகிழக்கு பருவ காலங்களில் பயிர் செய்யப்படும் பிரதேசங்களில் ஏப்ரல், மே மாதங்களில் அறுவடையாகிறது.

கவர்மெண்டாரிடம் இருக்கும் புள்ளி விவரங்கள், விலையேற்றம் 1942 ஜுலையில்தான் என்பதை காண்பிக்கும். அதுவரையில் 1941 ஜுன் மாதத்தில் இருந்த விலைவாசிகள்தான் இருந்து வந்தன. 1941 செப்டம்பரைவிட 1942 செப்டம்பரில் விலை வித்தியாசம் மிக அதிகம்.

| | 1938 செப். | 1939 செப். | 1940 செப். | 1941 செப். | 1942 செப். |
|---|---|---|---|---|---|
| தெலுங்கு பிரதேசம் ... | 100 | 102 | 130 | 154 | 187 |
| தமிழ் ... | 100 | 104 | 113 | 130 | 226 |

| | 1942 ஜுலை | 1942 செப்டம்பர் |
|---|---|---|
| தெலுங்கு ... | 140 | 187 |
| தமிழ் ... | 170 | 230 முதல் 240 வரை. |

இரண்டாவதாக, விலைவாசியை அனுசரித்து நிலவரி உயர்த்தப்பட வேண்டும் என்ற கொள்கையை எடுத்துக்கொண்டாலும், சாதாரணமாக பல வருஷங்களின் விலைவாசியை கணக்கெடுத்து தீர்மானம் செய்யவேண்டும். எப்போதும் இல்லாதிருந்த ஒரு பத்து வருஷ பொருளாதார நெருக்கடிக்குப்பின் இந்த இரண்டு வருஷமாக சண்டை காரணமாக ஏற்பட்டிருக்கும் விலை உயர்வை அடிப்படையாக வைத்து நிர்ணயிப்பது கூடாது. 1942ல் ஏற்பட்ட விலைவாசி ஏற்றத்தினால் விவசாயிகள் பயனடையவில்லை. 1941-1942-1943 வருஷத்திய விலை ஏற்றம்தான் அவர்களுக்கு கிடைக்கும். இந்த ஒரு வருஷம்தான் அவர்களுக்கு லாபம். மூன்றாவதாக, சண்டை நாம் எதிர்பார்ப்பதைவிட அதிசீக்கிரத்திலேயே முடிவடையலாம். பின்னிட்டு என்ன பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று யாரால் சொல்ல முடியும்.

மேலும் முக்கியமாக கவனிக்கவேண்டியது ஒரு விஷயம். விலைவாசி அதிகரிப்பு விவசாய பொருள்களுக்கு மாத்திரமல்லாமல், விவசாயி உற்பத்தி செய்யாத அநேக பொருள்களுக்கும் உண்டு, என்பதை மறக்கக்

கூடாது. விவசாய பொருள்களல்லாத மற்ற பொருள்களின் விலை மிகவும் அதிகரித்திருக்கிறது. ஆகையால் விவசாய பொருள்களின் விலை அதிகரிப்பினால் கிடைக்கக்கூடிய லாபம் மற்ற பொருள்களின் விலை உயர்வினால் பயன்படாமல் போய்விட்டது. விவசாய கருவிகள், செய்கை எருவு, முத்துக்கொட்டை எருவு, துணிமணிகள் இவைகள் எல்லாம் பன்மடங்கு விலை அதிகரித்து விவசாயப் பொருள்களின் விலை அதிகரிப்பினால் அடையக்கூடிய லாபத்தை மிகவும் மட்டுப்படுத்திவிட்டன. விவசாயிக்கு நஷ்டமே தவிர லாபமில்லை. அவனுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் லாபம் வாஸ்தவத்தில் ஒன்றுமில்லை.

இன்னும் ஒரு விஷயம். ஆகார பயிர் உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் பலமாக பிரசாரம் செய்யப்பட்டு வரும்போது, விவசாயி தனக்கு கிடைக்கும் லாபத்தை அதிக நிலவரி கொடுக்கும்படி நேரிட்டால், அவனுக்கு உத்சாகம் குறைவது சகஜம்தான். கவர்மெண்டார் தாங்கள் கொடுக்க வேண்டிய நிலவரிஜாவை ரத்து செய்து, மேலும் அதிகப்படி வசூல் செய்ய இது ஒரு உபாயமா என்று விவசாயி கேழ்க்கலாம். சர். ஜோகேந்திர சிங் சொல்லுவதுபோல் தேச முயற்சியில் உத்சாகத்துடன் பங்கெடுத்துக் கொள்ள விவசாயி தூண்டப்படவேண்டும். அவன் விலையை அவனுக்கு பாதகமாகும்படி கட்டுப்படுத்துவதோ, நிலவரியை அதிகப்படுத்துவதோ கூடாது.

நிலவரி மிகவும் அதிகமாக இருந்ததாலும், விவசாயத் தொழில் லாபகரமற்றதாக இருந்ததாலும் நிலவரியை குறைக்கவேண்டும் என்று ஜனங்கள் வற்புறுத்தினார்கள். விவசாயிக்கு சாசுவதமான நன்மை உண்டாக வேண்டுமென்ற நோக்கம் இருந்தது.

மேன்மை தங்கிய கவர்னரும் அவருடைய ஆலோசனையாளரும் இது வரையில் ஜனங்களின் விருப்பப்படியே கொள்கைகளை அனுசரித்து வருகிறார்கள். இது விஷயத்திலும் அவர்கள் அப்படியே செய்து விவசாயிகளின் மனப்பூர்வமான ஒத்துழைப்பை சண்டையில் விரோதிகளை வெல்ல தேச முயற்சியில் பெறுவார்கள் என்று நம்புகிறோம். நிரந்தரமாக ஏற்பட்டதாக விவசாயிகள் கருதியிருந்த நிலவரி சலுகைகள், இவ்வருஷம் நிறுத்தப்பட்டால், அதனால் அதிருப்தி ஏற்படுவது நிச்சயம். சர்கார் வருமானம் குறைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. விற்பனை வரி மூலம் அதிக பணம் கிடைத்திருக்கிறது. இந்த வரி மறைமுகமாக விவசாயியிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. சண்டைக்கு கவர்மெண்டுக்கு பணம் தேவை என்பது வாஸ்தவமே. யுத்த நிதிக்கு விவசாயி தாராளமாக பண உதவி செய்திருக்கிறான்.

ஆகையால் மேன்மைதங்கிய கவர்னரின் ஆலோசனையாளர்களுக்கு இது விஷயமாக தீர்க்கமாக ஆலோசித்து, நிலவரி சலுகைகளை நிறுத்த வேண்டாமென்று ஆலோசனை கூறுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

# கிராம அபிவிருத்தி.

(தொடர்ச்சி.)

(R. காலேடி, M.A., I.C.S.)

---

## 13. மேன்மையான கல்வி.

பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை சீக்கிரத்தில் அதிகரிக்கும் என்று சொல்லுவதற்கில்லை. வாஸ்தவத்தில் இப்போது கவர்மெண்டார் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை குறைத்து உள்ளவைகள் சரியான முறையில் வேலை செய்ய வேண்டும் என்ற கொள்கையை அனுசரிக்கிறார்கள். எந்த கிராமத்திற்கு பள்ளிக்கூடம் தேவையோ, அந்தக் கிராமத்து ஜனங்கள், ஏற்படுத்தப்படும் பள்ளிக்கூடத்தை சரியான முறையில் நடத்த உதவிசெய்து, அதனால் நல்ல பலனை அடையும்படி பொறுப்பை வகிக்கவேண்டும். கிராம ஜனங்கள் இரண்டு விஷயங்களை முக்கியமாக செய்ய வேண்டும். முதலாவது, சோம்பேறித் தனமாகவும் பாடம் சொல்ல வேண்டிய நேரங்களில் தூங்கிக்கொண்டும், பள்ளிக்கூடத்தை தன் இஷ்டம்போல் மூடிக்கொண்டும் இருக்கும் உபாத்தியாயர்கள் கண்டிப்பாய் கூடவே கூடாது. உபாத்தியாயர் தன் வேலையை சரிவர செய்யாவிட்டால் மாணாக்கரின் பெற்றோர்கள் அவர்களை கண்டிக்க வேண்டும் அப்படியும் சரிவர வேலையை கவனிக்காவிட்டால், அதைப்பற்றி மேலதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். இரண்டாவதாக, மாணாக்கர்கள் சரியாக கற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். பிள்ளைகளை தவறாமல் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் வையல்களில் வேலைக்கு அடிக்கடி அனுப்பக்கூடாது. அடிக்கடி தடைபட்டு பள்ளிக்கூடம் போகும் பையனால் சரியாக கல்வி கற்க முடியாது. காலம் வீணாக கழியும். இரண்டு வருஷமாவது தடைபடாமல் பையன்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப பெற்றோர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த காலத்தில் சிறுவர்கள் சாஸ்வதமான கல்வி அறிவை பெறுவார்கள். மேலும் அதிக பெண் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது மிக அவசியம். மூடமான ஸ்திரீயினால் தன் கணவனுக்காவது, மற்றவர்களுக்காவது ஒரு பிரயோஜனமும் இல்லை. அவர்களே தங்கள் அறியாமையினால் கஷ்டப்படுவார்கள். அதிலும் ஸ்திரீகள் கிராமத்தின் ஜனத்தொகையில் பாதியாகிறார்கள். பாதி ஜனங்கள் பிற்போக்காக யிருந்தால், மற்ற பாதி எப்படி முன்னேற முடியும்.

## 14. விளையாட்டுகள்.

சாதாரணமாக, கிராமத்தார்கள் விளையாட்டுகள் ஆடுவதில்லை. சில ஆட்டங்களுக்கு பணம் கொஞ்சம் செலவு ஏற்படுமாயினும், வேறு சில ஆட்டங்களுக்கு யாதொரு செலவும் கிடையாது. ஒழிந்த நேரங்களை கழிக்க வெட்டி பேச்சையும் வம்பளப்பதையும் விட ஆட்டங்கள் நன்மையை தருகின்றன. கிராமத்தில் விவேகிகளாக இருப்பவர்கள், எளிய ஆட்டங்களில் ஜனங்களை கலந்துகொள்ளும்படி வற்புறுத்தி, விசேஷமாக சிறுவர்களை, ஆட்டங்கள், ஓட்டங்கள், குஸ்தி, தாவதல் முதலிய விளையாட்டுகளில் பங்கெடுத்துக்கொள்ளும்படி தூண்டினால், அவர்கள் மன

திற்கு தெம்பும், தேகத்திற்கு வலிவும் உண்டாகும். விளையாட்டு பழக்கம் ஏற்பட்ட பின் விளையாட்டு ஸ்தலங்களைப்பற்றியும், மைதானங்களைப்பற்றியும் கவனித்துக் கொள்ளலாம்.

## 5-ம் பாகம் —குடியானவனுக்கு பழமொழிகள்.

விவசாய ஜனங்களுக்குப் பேசும்போது பேசுபவர் கேட்பவர்களின் சக்தியையும், தன்மையையும் அனுசரித்து அதற்கேற்ப பேசவேண்டும். உபமானங்களும், பழமொழிகளும் கேட்பவர்களின் கவனத்தை இழுத்து, அவர்கள் மனதில் கேட்டவைகளைப்பற்றி சிந்திக்க உதவி செய்கிறது. அடியில் கண்ட சிலவை உபயோகமாக இருக்கலாம். (இந்த விஷயமாக வேலை செய்யும் ஊழியர்கள் தாங்களாவது, தங்கள் சிநேகிதர்களாவது கையாண்டு பலனளித்திருக்கும் கதைகளையோ, பழமொழிகளையோ எனக்கு தெரிவித்தால், நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்.)

1. ஒரு குடியானவன் இரண்டு எருதுகளைக்கொண்டு உழுதுக்கொண்டிருந்தான். கஷ்டப்பட்டு வேலை செய்யும் சுபாவமுள்ள ஒரு எருது நன்றாக இழுத்து வேலை செய்தது. மற்றொன்று சோம்பேறி. அடிக்கடி படுத்துக்கொள்ள முயற்சித்தது. அதன் காரணமாக நிலத்தை சரியாக உழ முடியவில்லை. (இதே மாதிரி, கவர்மெண்டாருக்கு தங்கள் உத்தியோகஸ்தர்கள், கிராமத்தார்கள், இருவருடைய உதவியும் தேவை. கிராமத்தார்கள் சகாயம் செய்யாத பக்ஷத்தில், கவர்மெண்டு கிராமங்களை சீர்திருத்துவது முடியாத காரியம்.)

2. ஒரு ஊரில் ஒரு சோம்பேறிச் சிறுவன் இருந்தான். அவனுக்கு தகப்பனாரும், சமைத்துப்போட பெண்ஜாதியும் உண்டு. ஒரு நாள் அவன் தகப்பனார் பிள்ளையைப் பார்த்து 'அப்பா இந்த வருஷம் சாகுபடி சரியாக வரவில்லை. நெல் வியாபாரியிடம் நெல் போட்டதில் கொஞ்சம் தொகைதான் கிடைத்தது. வயல்களில் வேலை செய்து ஏதாவது பணம் சம்பாதித்து வா' என்றார். ஆனால் மகன் 'என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நீ எங்களெல்லாருக்காகவும் பாடுபடு', என்று சொல்லிவிட்டான் இருவரும் பட்டினியாக இருக்கும்படி நேரிட்டது. பிறகு மகனின் பெண்ஜாதி நோய் வாய்ப்பட்டு இறந்து போனாள். அதன்பின், தகப்பனார் 'பையா, நான் தினமும் வயல்களுக்கு போய்விடுகிறேன். நீ நம்மிருவருக்கும் சமையல் செய்து வை,' என்று சொன்னார். அதற்கு பையன், 'எனக்கு சமையல் தெரியாது. நீதான் நம்மிருவருக்கும் சமைத்து போடவேண்டும்,' என்று பதிலளித்தான். இதன் காரணமாக இருவரும் சமையல் செய்யப்படாத ஆகாரத்தை உண்ணவேண்டி வந்தது. (இதே போல், குடியானவர்கள், கவர்மெண்டும், ஜில்லா போர்டும் எல்லாவற்றையும் செய்துவிடும் என்று எண்ணி தாங்கள் சும்மா இருந்தால், நன்மைகளைப் பெறமுடியாது.)

3. ஒரு கிராமத்தில் ஒரு பணக்காரனிடம் வேலை செய்துக்கொண்டிருந்த ஒரு ஏழை இருந்தான். அவனுக்கு ஒரு வீடு இருந்தது. ஆனால் அதற்கு திண்ணை இல்லை. அவனுக்கு திண்ணை போடவேண்டும் என்ற ஆசை. ஆசை பூர்த்தியாக வேண்டும் என்று ரொம்பவும் பிரார்த்தித்தும் பூர்த்தியாகவில்லை. அவன் தன் யஜமானனையணுகி தனக்கு ஒரு திண்ணை கட்டித்தரும்படி வேண்டினான். ஆனால் யஜமானன், 'எனக்கு பல ஜோலிகள் இருக்கின்றன. என் வேலையாட்களுக்கும் கவனிக்க வேண்டிய வேலைகள் இருக்கின்றன', என்று

சொல்லி மறுத்து விட்டான். ஆனால் அந்த ஏழை மிகவும் வணக்கமாக வேண்டிக்கொண்டதின் பேரில், யஜமானன், 'நீயே அந்த வேலையை செய்துக்கொள்வாயானால், நான் அதன் செலவுக்கு இரண்டு ரூபாய் தருகிறேன்,' என்று ஒப்புக்கொண்டார். ஆனால் அந்த ஏழை, 'இந்த ரூபாய் எப்படி போதும். அது கல் வாங்குவதற்கே போதாது. கூலியாட்களுக்கு எங்கிருந்து கொடுப்பது' என்று முனகிக்கொண்டு போய்விட்டான். ஆனால் பிறகு யோசனை செய்து, திரும்பி வந்து, அந்த இரண்டு ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு, தன் சொந்த பணத்தைக் கொண்டும், தன் உழைப்பை கொண்டும் திண்ணையை கட்டி முடித்தான். (இது மாதிரி, குடியானவர்கள், தாங்கள் விரும்பும் நன்மைகளை அடைய தங்கள் பணத்தையும், உழைப்பையும் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும்.)

4. ஒரு சமயம் ஐந்து பேர்கள் சேர்ந்து ஒரு மாமரத்தை பயிர் செய்ய எண்ணினார்கள். முதல் வருஷம் அவர்கள் ஒரு குழி தோண்டினார்கள். ஆனால் அதில் விதை போடவில்லை. அடுத்த வருஷம் அதில் விதைத்து, ஆனால் தண்ணீரும், எருவும் போடாமல் விட்டு விட்டார்கள். மூன்றாவது வருஷம் அவர்கள் தண்ணீர் பாய்ச்சி, எருவு போட்டார்கள். ஆனால் அதைச்சுற்றி வேலி போடவில்லை. ஆகையால் ஆடுகள் வந்து செடியை மேய்த்துவிட்டன. கடைசியாக மரம் வளர்த்தார்கள். ஆனால் அதன் கிளைகளையெல்லாம் வெட்டி விட்டு அடிமரம் மாத்திரம் நின்றுக்கொண்டிருந்தது. அது பழம் தரும் வரையில் அவர்கள் காத்துக்கொண்டிருக்கவில்லை. கடைசியில் அதை அவர்கள் செலவுசெய்த தொகைக்கு கால் பாகத்த விலைக்கு விற்றார்கள். (இதிலிருந்து ஐக்ய சங்கங்கள் ஸ்தாபித்து வேலை செய்வதில் ஏற்படும் தவறுதல்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். குடிகள் முதலில் ஒரு சங்கம் ஏற்படுத்த நிச்சயக்கிறார்கள். ஆனால் ஒன்றும் செய்வதில்லை. பிறகு ஒரு சங்கம் ஏற்படுத்துகிறார்கள். ஆனால் அதை பலப்படுத்த ஒன்றும் செய்வதில்லை. அல்லது சரியான பஞ்சாயத்து இல்லாமலும், கக்ஷி சண்டைகளாலும் அவை நசித்துப் போகின்றன. அப்படி சங்கம் கொஞ்சம் வளர்ந்து விருத்தியானால், அதன் நிதியை துர் விநியோகம் செய்து, கொடுக்கவேண்டிய கடன்களை சரிவர கொடுப்பதில்லை. இதன் காரணமாக சங்கம் கலைக்கப்பட வேண்டும்படி ஏற்பட்டு, எல்லாருக்கும் நஷ்டம் உண்டாகிறது.)

5. குன்றுகளிலிருந்து பல நீரோடைகள் பள்ளத்தாக்குகளில் சேருகின்றன. ஆனால் ஒரு இஞ்சினியர் சாமர்த்தியமாய் அணை போட்டு அதை தடுக்காவிட்டால், எல்லா வெள்ளமும் ஓடி ஆற்றில் கலந்து விடுகிறது. இஞ்சினியர் அந்த வெள்ளத்தை தடுக்க அணைபோட்டு, தண்ணீரை நிறுத்தி ஒரு ஏரி கட்டுகிறார். அதனால் அநேக நிலங்களுக்கு நீர் பாய்ந்து, நல்ல விளைவு ஏற்பட்டு, அதிக நன்மை ஏற்படுகிறது. (ஒவ்வொரு குடியானவனும் தன்னுடைய உழைப்பு, அனுபவம், பணம், எல்லாவற்றையும் தன் சொந்த நன்மைக்கே உபயோகப்படுத்துகிறான். ஆனால் எல்லாம் வீணாகின்றன. அப்படியில்லாமல் எல்லா ஜனங்களும் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் ஸ்தாபித்து வேலை செய்தால், அதன் மூலம் சகலரும் அதிக நன்மைகளையடைய சுலபமாகிறது. அதுபோல் ஒரு தனிப்பட்ட சங்கத்தினால் மட்டும் ஒன்றும் சாதிக்க முடியாது. ஒரு மத்திய சங்கம் ஸ்தாபித்து, எல்லா சங்கங்களையும் சரியான முறையில் வேலைகளைச் செய்யும்படி கவனிக்க வேண்டும்.)

6. ஒரு கிராமத்தில் சந்தைக்கு மூன்று பேர்கள் சாமான்கள் கொண்டு போக வேண்டியிருந்தது. ஒருவன் திங்கட்கிழமையும், ஒருவன்

செவ்வாய்க்கிழமையும், இன்னொருவன் புதன்கிழமையும் கொண்டு போக விரும்பினார்கள். ஆனால் ஒருவருக்கும் வண்டி கிடையாது. ஊரில் வாடகைக்கு இருந்தது ஒரே ஒரு வண்டிதான். ஆனால் அது பெரிய வலுவான வண்டி. எல்லா சாமான்களையும் ஏக காலத்தில் கொண்டுபோகக் கூடியது. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாள் சொந்த போய் வண்டிக்கு ஒவ்வொரு ரூபாய் சத்தம் கொடுத்தார்கள். அடுத்த மாதமும் ஆம்மூவர் சந்தைக்கு சாமான் எடுத்துப்போகவேண்டி வந்தது. அப்போது எல்லாரும் ஒரே தினத்தில் வண்டியை கேட்டு, தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டார்கள். ஒருவன் சத்தம் ஒரு ரூபாய் கொடுப்பதாகவும், அடுத்தவன் 1¼ ரூபாய் கொடுப்பதாகவும், மூன்றாவதுவன் 1½ ரூபாய் கொடுப்பதாகவும் போட்டி போட்டார்கள். அதற்கடுத்த மாசமும் சாமான்கள் கொண்டு போகவேண்டி வந்தது. ஆனால் அவர்கள் மூன்று பேரும் ஒன்றாகூடி, வண்டியை மூன்று பேரும் ஒரே தடவை உபயோகிப்பதாக நிச்சயித்து, ஒரு ரூபாய் சத்தம் பேசி முடித்தார்கள்— எப்போது அவர்கள் புத்திசாலித்தனமாக நடந்துக்கொண்டார்கள் என்று சொல்லிவிடலாமல்லவா?

7. ஒரு கிராமத்தில் பல குடிகள் இருந்தார்கள். அவர்களுக்குச் சொந்தத்தில் எருதுகள் கிடையாது. அதில் ஒரு ஏகரா உழவேண்டிய 50 பேர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவனும் ஒரு ரூபாய் கொடுத்து, ஒரு ஜதை எருதும், மரக்கலப்பையும் மற்றவர்களிடம் வாடகைக்கு வாங்கி தன் நிலத்தை உழுதான். அதே மாதிரி ஒரு ஏகரா உழவேண்டிய இன்னும் 50 பேர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒன்றுகூடி ஆளுக்கு 10 ரூபாய் போட்டார்கள். இதனால் கிடைத்த 500 ரூபாயைக்கொண்டு நல்ல இரண்டு ஜதை எருதுகளும், இரண்டு இரும்பு கலப்பைகளும் வாங்கினார்கள். தங்கள் நிலங்களை நன்றாக உழுது நல்ல விளைச்சல் உண்டாக்கினார்கள். 5 வருஷம் கழித்து, அவர்கள் இன்னும் இரண்டு ஜதை நல்ல எருதுகள் வாங்கினார்கள். அந்த எருதுகளை வண்டிகளில் கட்டவும், கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்து நிலங்களுக்கு நீர் பாய்ச்சவும் உபயோகப்படுத்தினார்கள். சாணியை எருவுக்கு உபயோகித்தார்கள். முதல் சொன்ன 50 பேர்களும் உழுவதற்கு தலா ஒரு ரூபாயும், வண்டி சத்தம் இரண்டு ரூபாயும் மற்ற தண்ணீர் பாய்ச்ச இன்னும் ரூபாயும் செலவு செய்து, அப்படியே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பின்னால் குறிப்பிட்ட 50 பேர்கள், 10 வருஷத்தில் தலா 10 ரூபாய் செலவு செய்து, தங்கள் நிலங்களை விருத்தி செய்துக்கொண்டார்கள். யார் புத்திசாலிகள் என்று சொல்லலாமல்லவா?

8. ஒருவன் பிரயாணம் போகும் போது இரவில் வழியில் ஒரு பெரிய மலையில் பாதையை கடக்க வேண்டிவந்தது. அந்த மலையில் திருடர்கள் அதிகம். அந்த வழியே கொஞ்ச தூரம் போனதும், அவனை திருடர்கள் வழி மறித்து அவனிடமிருந்து துணிமணியுள்பட, எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு, காயப்படுத்தி கொத்துயிருடன் அவனை விட்டுவிட்டு போய் விட்டார்கள். அடுத்த தடவை அவன் பிரயாணம் செய்த போது, அவன் ஒரு கூட்டத்துடன் சென்றான். அப்போது அநேக திருடர்கள் அவர்களை அடிக்க தைர்யமில்லாமல் சும்மாயிருந்து விட்டார்கள். அப்படி வந்த ஒரு கூட்டம் நன்றாக அடிபட்டு திரும்பி ஓடிவிட்டது. ஓரிருவர் பிடியும் பட்டார்கள். இதிலிருந்து, தனிப்பட்ட ஒருவன் வாழ்க்கையின் கஷ்டங்களிலிருந்தும், கடன், வியாதி, தரித்திரம், கஷ்ட நஷ்டங்கள், இந்த தொல்லைகளி

விருந்து ஒண்டியாக இருந்து சமாளிப்பது கடினம். மற்றவர்களுடன் ஒன்று சேர்ந்து வாழ்க்கையை நடத்தினால், இந்த எல்லாவித கஷ்டங்களிலிருந்தும் விடு படலாம்.

9. ஒரு ஊரில் நான்கு ஆள் ஆழமுள்ள செங்குத்தான ஒரு கிணறு இருந்தது. ஒரு நாள் ஐந்து மனிதர்கள் ஒருவர் பின் ஒருவராக அதற்குள் விழுந்து விட்டார்கள். ஒவ்வொருவனும் தான் அதிலிருந்து வெளியேறிவர அதிக நேரம் முயற்சித்தும, முடியவில்லை. கடைசியில் ஒருவன், மற்றவர்களைப்பார்த்து இப்படி தனித்தனியாக வெளியே வரமுயற்சி செய்தால் பலிக்காதென்றும், எல்லாரும் ஒருவர் தோள் மேல் மற்றொருவன் நின்றுக் கொண்டால் ஒருவன் வெளிவந்து, வெளியிலிருந்து ஒரு கயிறு கொண்டுவந்து, எல்லாரையும் மீட்கலாம் என்று யுக்தி சொன்னதின் பேரில், அதன்படி செய்து எல்லாரும் வெளியே வாமுடிந்தது, ஒருவருக்கு ஒருவர் சகாயம் செய்தாலன்றி கஷ்டங்கள் தீராதென்றும், தாங்கள் விருத்தியடைய ஐக்யப்பட்டு முயற்சி செய்யவேண்டுமென்றும் கிராம ஜனங்கள் அறியவேண்டும்.

## 6-ம் பாகம்.—கிராம அபிவிருத்தியில் தனிப்பட்ட செல்வந்தர்கள் செய்யக் கூடிய நன்மைகள்.

இது வரையில் கவர்மெண்டு உத்தியோகஸ்தர்களும், கிராமத்தார்களும் செய்ய வேண்டிய வற்றைக் கவனித்தோம். ஆனால் செல்வம் படைத்த போது ஜன ஊழியம் செய்ய ஆற்றலும் உத்சாகமும் உள்ள தனிப்பட்டவர்கள் செய்யவேண்டிய வேலைகளும் இருக்கின்றன. கிராமத்தார்கள் தொடங்கி யிருக்கும் எல்லா நல்ல முயற்சிகளுக்கும் தங்கள் ஆலோசனையாலும் திரவியத்தாலும் சகாயம் செய்யலாம். செஞ்சிலுவை சங்கம் போன்ற தர்ம சங்கத்தின் அங்கத்தினர்களாக அதிக சேவை புரியலாம். பலதரப்பட்ட முயற்சிகளை ஒன்று சேர்த்து மேன்மையான ஊழியம் செய்யலாம் நல்ல சுகாதார முறைகளில் வசிக்கவும், ஐக்ய சங்கங்களை சரிவர நடத்தவும், பிரதம சிகித்ஸை செய்யவும், மருத்துவம், கைவேலைப் படிப்பு, கிராம போதகர், ஊர் ஊராய் நாடகம் செய்து சந்தோஷம் கொடுக்கக்கூடிய தேர்ச்சி பெற்ற நடிகர்கள், ஒவ்வொரு ஊருக்கும் விளையாட்டு ஸ்தலமும், மைதானமும் ஏற்படுதல், நல்ல பொழுது போக்குக்காக கிராமங்களுக்குள் ஆட்டங்களில் போட்டி ஏற்படுத்துவது, ஆட்சி முறைகளைப்பற்றி எளிய முறையில் கிராம ஜனங்களுக்கு போதிப்பது, வாக்குரிமையை எப்படி சரியாக உபயோகப் படுத்தவேண்டும் என்று தெரிவிப்பது, கிராம தேவைகளை மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து, மேலதிகாரிகளின் தீர்மானங்களை கிராம ஜனங்களுக்கு விளக்குவது.

இவை போல பல உபயோகமான சேவைகளை செய்ய இடமுண்டு. இவைகள் கவர்மெண்டாலும், தனிப்பட்ட கிராமத்தாராலும் செய்ய இயலாதவை. விவேகமும், உத்சாகமும் கொண்டவர்களால் தான் இப்படிப்பட்ட வேலைகள் செய்ய முடியும். முடிவாக நான் சொல்லுவது, அவர்களால் இது முடியும் அவர்கள் செய்யத்தான் வேண்டும்.

முற்றிற்று.

# இந்திய ஆகார நிலைமையைப்பற்றி ஸர். ஜோகேந்திர சிங்.

1942 ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி புது டெல்லியில் மத்திய ஆகார ஆலோசனை சபையை திறந்து வைக்கும்போது, இந்தியா கவர்மெண்டு, கல்வி, ஆரோக்ய மெம்பரான கனம் சர்தார் ஸர் ஜோகேந்திர சிங் பேசியதாவது :—

நாம் நம் ஆகார நிலைமை சீர்படுத்தி பலப்படுத்த யோசனைகள் செய்ய இங்கு கூடியிருக்கிறோம். எல்லா மாகாணங்களும், சமஸ்தானங்களும் நம்முடைய அதிக ஆகார உற்பத்தி இயக்கத்தில் இவ்வளவு உற்சாகத்துடனும், சுறுசுறுப்புடனும் வரவேற்று பங்கெடுத்து உழைப்பது மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்தியாவின் பொருளாதார ஐக்யத்தையும், எல்லா மாகாணங்களையும் சேர்த்து ஜீவநாடிபோல் விளங்க ஒரு மத்திய ஸ்தாபனத்தின் அவசியத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. எல்லா மாகாணங்களும், சமஸ்தானங்களும் தாமதமின்றி சென்ற ஏப்ரல் மாதம் நடந்த மகாநாட்டின் சிபார்சுகளை பின்பற்றத் தொடங்கின. எல்லா நகரங்களிலும் மூலை முடுக்குகளிலும் அதிக ஆகார உற்பத்தி பிரசாரம் பலமாக நடந்தது. ஜல வரி குறைத்தும், கால்வாய் பாய்ச்சலை ஆகார பயிர்களுக்கு மாத்திரம் உபயோகப்படுத்தும்படி செய்தும், காம்பு நிலங்களை வரியன்னியில் கொடுத்தும், எலும்புத்தூள், புண்ணாக்கு முதலிய எருவுக்களை இலவசமாகக் கொடுத்தும் மேன்மையான விதைகளைக் கொடுத்தும், எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு கோடி ரூபாயிக்கு மேலாக தக்காவி கடன்கள் கொடுத்தும், இந்த இயக்கத்தில் கலந்துகொள்ள ஜனங்களுக்கு தூண்டுதல் செய்திருக்கின்றன.

## மத்திய கவர்மெண்டின் உதவி.

மத்திய கவர்மெண்டும் தான் செய்யவேண்டியதைக் குறித்து சும்மாவில்லை. சிறிய தாள் பருத்திக்கு ஜப்பானின் கிராக்கி இல்லாமல் போய்விடும் என்று கொஞ்ச நாளாகவே அறிந்து, பருத்தி பயிர் செய்பவர்களுக்கு ஆகார பயிர் செய்ய உதவுவதற்காக, இறக்குமதியாகும் பருத்திக்கு வரி விதித்து, அதன் மூலம் ஒரு நிதி ஏற்படுத்தினார்கள்.

இப்போது மாகாணங்களில் பருத்திக்குப் பதில் ஆகாரப்பயிர்களையாவது, தான்யப்பயிர்களையாவது செய்யும் குடிகளுக்கு இந்த நிதியிலிருந்து திரவிய சகாயம் செய்கிறோம். ஆனால் அது பயிர் செய்பவனுக்குப் போய்ச் சேரவேண்டும். இது வரையில் நான்கு மாகாணங்களுக்கும், மூன்று சமஸ்தானங்களுக்கும் உதவியளித்திருக்கிறது. நிதியுள்ள வரையில் இவ்விஷயத்திற்காக மனுச்செய்தால் அவை அனுகூலமாக கவனிக்கப்படும்.

மேலும் ஆகார உற்பத்தி மகாநாட்டின் கொள்கையை இந்தியா கவர்மெண்டு ஒப்புக்கொண்டு, அ.து. பின்னிட்டு ஆகாரப்பயிர்களின் விலை திடீரென்று குறைந்துவிட்டால் தாங்களே மாகாணங்களிலும், சமஸ்தானங்களிலும் போதிய சரக்குகளை வாங்குவதாக ஒப்புக்கொண்டதைத் தெரிவித்து, குடிகளின் நன்மை கருதியே செய்வதாக அவர்களுக்கு தைரியம் கூறியிருக்கிறார்கள்.

முக்கியமாக மூன்று வழிகளில் அதிக ஆகார உற்பத்தி செய்யலாம்:—

(1) எல்லா பயிர் செய்யக்கூடிய காம்பு நிலத்தையும் சாகுபடி செய்வது;

(2) சிறிய தாள் பருத்தி, சணல் முதலிய பயிர்களுக்குப்பதில் ஆகாரப் பயிர்களைச் செய்வது;

(3) மேன்மையான விதைகளையும், தகுந்த எருக்களையும் அதிகமாக உபயோகித்து, விளைவை அதிகப்படுத்துவது;

எல்லா மாகாணங்களிலும் இப்போது சிறிய தாள் பருத்திக்கும், சணலுக்கும் பதில் 50 லக்ஷம் ஏகர் நிலங்களில் ஆகாரப்பயிர்கள் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இன்னும் பயிர்செய்யக்கூடிய காம்ப நிலங்கள் 10½ கோடி ஏகராக்கள் இருக்கின்றன. மேலே குறிப்பிட்ட எண்ணிக்கை இன்னும் பூர்த்தியாகவில்லை. இன்னும் நிலவளத்தைப்பற்றியும் இதர விவரங்களைப்பற்றியும் தகவல்கள் கிடைக்க வில்லை. ஆனால் குறைந்த பக்ஷம் இவைகளில் 50 லக்ஷம் ஏகராக்களாவது சாகுபடி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏற்பட பிரார்த்திக்கிறேன். ஏற்படுமா என்றும் சம்சயிக்கிறேன்.

## சாதாரணமாக ஆகாரத் தேவைகள்.

ஏற்கனவே சாகுபடியிலிருக்கும் நிலங்களின் விளைவை அதிகரிக்கச் செய்யவே நாம் அதிகம் முயலவேண்டும்.

இந்த சண்டை சந்தர்பத்தில் நமக்குத் தேவையாயிருக்கும் ஆகார பொருள் களின் அளவை தெரிவிக்கிறேன். இது நம் துருப்புகளின் தேவையையும், உள் நாட்டு, வெளி நாட்டு இறக்குமதி, ஏற்றுமதி தடைப்பட்டிருப்பதையும் அனு சரித்தது.

சமாதான காலங்களிலேயே நம் பாமர ஜனங்கள் உட்கொள்ளும் ஆகாரம் சத்து அற்றது என்பது தெரிந்த விஷயம். நம் தேச ஜனத்தொகை 38 கோடியில் 27 கோடி வயது வந்தவர்களும், 11 கோடி சிறுவர்கள். டாக்டர் ஆக்ராயிடு, சர்ஜன் ரஸ்ஸல் இவர்கள்படி, சரியான புஷ்டி ஆகாரத்தில் அரிசி முதலிய தான்யங் கள் 15 அவுன்சும், பருப்புகள் 3 அவுன்சு, காய்கறிகள் 10 அவுன்சு, கொழுப்பு எண்ணெ 2 அவுன்சு, பழங்கள் 2 அவுன்சு, பால் 8 அவுன்சு ஆக தலைக்கு ஒரு நாளைக்கு 40 அவுன்சுகள் வேண்டும். ஆகையால் கண்டிப்பாய் தேவையானது:—

| | தேவை. | உற்பத்தி. | அதிகம் அல்லது குறைவு (லக்ஷம் டன்கள்.) |
|---|---|---|---|
| அரிசி முதலிய தான்யங்கள் ... | 503 | 600 | + 97 |
| பால் ... | 365 | 228 | — 137 |
| பருப்புகள் ... | 101 | 103 | + 2 |

பழங்களையும், காய்கறிகளையும் குறித்து விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் காய்கறிகள் தேவைக்கு மிகக்குறைவாகத்தான் உண்டாகின்றன. தான்யங் கள (உருளைக்கிழங்கு உள்பட) தேவைக்குச் சரியாக கிடைக்கின்றன. ஆனால் பால் ரொம்பக் குறைவு.

## பால் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டிய அவசியம்.

அதிக பால் உற்பத்தி செய்வதும், காய்கறிகள் உற்பத்தியும் மிகவும் முக்கியம். சரியான தீனி, வளர்ப்பு இவைகள் மூலம்தான் பால் உற்பத்தியை அதிகப்படுத்தலாம். நவீன பால் பண்ணைகள் முறையை அனுசரித்தால், பால் சப்ளையை இப்போதைப்போல் இரட்டிப்பாக்க முடியும் என்று நான் என் சொந்த அனுபவத்தினால் சொல்ல முடியும். நல்ல எருதுகளை போஷித்து, இவ்வருஷம் அதிகமான புல் வகைகளை பயிர் செய்து தீனிக்கு சேகரித்து வைக்கவேண்டும்.

இது நிற்க, பர்மா போனதாலும், சில இடங்களில் சாவியானதாலும் ஏற்பட்டிருக்கும் சுமார் 22 லக்ஷம் டன்கள் குறைவை எப்படி ஈடு செய்து, நம் ஜனங்களுக்கும், துருப்புகளுக்கும் ஆகாரம் அளிக்க முடியும் என்பதைப்பற்றி நீங்கள் ஆலோசிக்க வேண்டும்.

இனி ஜனங்களை அதிகம் தினை தான்யங்களைச் சாப்பிடும்படி தூண்டவேண்டும். கோதுமையைவிட இவைகளின் விலை அதிகம் என்பது ஒன்றுதான் சற்று தடைப்படுத்தும்.

### கஷ்டமான நிலமை.

ஆயினும் எல்லாம் சரிவர ஒரு கஷ்டமுமில்லாமல் நடந்துவிடும் என்ற நம்பிக்கையை நான் சொல்லமாட்டேன். ஏதாவது சில பிரதேசங்களில் எந்த சமயத்திலும் பஞ்சம் ஏற்படலாம். போக்குவரத்து சாதனங்கள் தடைபட்டு, வியாபாரம் தடங்கல் படலாம். பாதுகாப்பு படைகளின் தேவைக்காக சாமான்கள் அனுப்பும்படி நேரிடலாம். இந்த கஷ்டங்கள் ஏற்படும் என்று எண்ணியே நீங்கள் ஆலோசித்து ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எல்லா நிலமைகளையும் சமாளிக்க தயார் செய்யவேண்டும்.

உங்கள் விஷய அட்டவணையில் கவனிக்கவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. இவைகளை சரிவர ஆலோசித்து திருப்திகரமாக தீர்ப்பதில்தான் அதிக ஆகார உற்பத்தி இயக்கத்தின் வெற்றி இருக்கிறது. அந்த விஷயங்கள் சிலவற்றை குறித்து சுருக்கமாக இங்கு பிரஸ்தாபிக்கிறேன்.

### எருவு.

மலிவானதும், உபயோகமானதுமான எருவை அடையும் விஷயத்தில் மாகாண, சமஸ்தான அதிகாரிகள் எல்லா முயர்சியையும் செய்யவேண்டும். இப்போது விளைவை அதிகரிக்கவும், பூமியின் செழிப்புத் தன்மையை விருத்தி செய்யவும் இது இன்றியமையாதது. 'கம்போஸ்ட்' செய்வது, பட்டணங்களில் அப்புறப்படுத்தப்படும் குப்பைகள், இவைகளை எருவாக உபயோகப்படுத்தினால் அதிக நன்மைதரும். 'கம்போஸ்ட்' செய்வதற்குத் தேவையான சாமான்கள் கிடைக்க எந்த பயிர் அல்லது காட்டு செடிகள் எடுத்தவை என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

மிகவும் மேன்மையான எருவான புண்ணாக்கு இந்தியாவில் வருஷம் 14½ லக்ஷம் டன்கள் கிடைக்கிறது. இப்போது இது இன்னும் கொஞ்சம் அதிகமாக கிடைக்கலாம். ஏனெனில் அதிகமான எண்ணை இப்போது ஆடப்படுவதுடன், வெளி நாடுகளுக்கு போய்க்கொண்டிருந்த ஏற்றுமதியும் குறைந்து விட்டது. மனிதன் கால் நடைகள், பூமி, இம் மூன்றுக்கும் உபயோகமாக இது இருக்கிறது. மாகாண, சமஸ்தான அதிகாரிகளை, மிகுதியாக கிடைக்கும் எல்லா புண்ணாக்கையும்

வாங்கி, பயிர் செய்பவர்களுக்கு அதை தாராளமாய் கொடுத்து, நிலங்களுக்கும், கால் நடைகளுக்கும் உபயோகப்படுத்தும்படி சொல்ல ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றொரு விஷயத்தையும் கவனிக்கவும். நமக்கு வருஷம் 21 லக்ஷ டன் பருத்திக்கொட்டை கிடைக்கிறது. இதில் ஒரு சிறிய பாகத்தையே பஞ்சாபில் அறைக்கிறார்கள். எல்லா கொட்டையையும் ஆட்டினால், 18 லக்ஷ டன் புண்ணாக்கு கிடைக்கும். ஒரு ஏகராவுக்கு ½ டன் வீதம் 36 லக்ஷ ஏகராக்களுக்கு இது எருவாகும். விளைவு 35 சத விகிதம் அதிகப்படும். நம் எண்ணை உற்பத்தியை அதிகரிக்க இடமிருக்கிறது. பாங்கிகளில் சும்மா இருக்கும் பணத்தை இதற்கு உபயோகப்படுத்தலாம்.

தான்யங்களை ஜாக்கிரதையாக ஓரிடத்தில் சேகரித்து வைத்து, எலி, பூச்சி, புழுக்கள் முதலியவை பாழு செய்யாமல் காப்பாற்றுவதைப்பற்றி சாதாரணமாக அதிக கவனம் செலுத்தப்படுவதில்லை. ஆனால் இது விஷயமாக பஞ்சாபில் நல்ல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பால், முட்டைகள், காய்கறிகள், பழங்கள், இவைபோன்ற புஷ்டி தரும் ஆகாரத்தை அதிகப்படியாக உற்பத்தி செய்து, ஜனங்கள் உபயோகிப்பது அவசியம். கால் நடைகளுக்கு போதுமான தீனிக்கு ஏற்பாடு செய்வதும் முக்கியம். தற்சமயம் பட்டணங்களுக்கு செய்யப்படும் பால் சப்ளை சரிவர செய்யப்பட்டு, நெருக்கடி ஏற்படும் சமயங்களில் தடை படாமல் இருக்கும்படி செய்வதும் கவனிக்கவேண்டிய விஷயம். கடைசியாக, யுத்தம் நீடித்து நடப்பதானால், அதனால் ஏற்படும் பொருளாதார, வியாபார மாறுதல்கள், கஷ்டங்கள் இவைகளை மறக்கக்கூடாது. இப்போதிருந்தே நமது உற்பத்தியையும், செலவையும், சரிவர செய்து, உள்நாட்டுத் தேவையை அதிகரிக்க வழிதேடி, பாமர ஜனங்களின் பொருளாதார நிலமையை சீர்படுத்தி, விவசாயிக்கு தகுந்த விலைவாசிகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நீளதான் பருத்தி, மேன்மையான புகையிலை, நல்ல கரும்பு இவைகளை இன்னும் அதிகமாக உற்பத்திசெய்ய இடமிருக்கிறது. உள்நாட்டிலேயே நம் சருக்குகளுக்கு கிராக்கி ஏற்படும்படி செய்யவேண்டும்.

## 'முக்கியமான பிரச்னை.

இந்த சபை முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்த யுத்தம் முடிந்த பிறகு நம் விவசாயியின் நிலமை எப்படியிருக்கும், சென்ற யுத்தம் முடிவடைந்தபின் நம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட மாதிரி கஷ்டங்கள் இப்போதும் ஏற்படாமலிருக்க நாம் என்ன என்ன செய்யவேண்டியது, என்பது தான்.

முக்கியமாக, உற்பத்தியை அனுசரித்துதான் விலைவாசியும், நடமாடும் நாணயங்களை அனுசரித்துதான் விலைவாசியும் நிர்ணயிக்கப்படுகின்றன என்பது கவனிக்க வேண்டியது. தொழிலாளிகள் சம்பளம் அதிகரித்தால், அது விலைவாசியை பாதிக்காமல் இருக்காது. அதிகப்படியான நாணயங்கள் நடமாட ஆரம்பித்தால், அவைகளின் வாங்கும் மதிப்பு குறைந்து, விலைவாசிகள் ஏறுகின்றன. ரிசர்வ் பாங்கி கவர்னர் சொல்லுவது போல், நமக்கு பவுன் ஸ்டர்லிங்கு கொடுத்து, பிரிடிஷ் கவர்மெண்டார் இந்தியாவில் ஏராளமாக சாமான்கள் வாங்குவதால், நாம் அதை ரூபாயாக மாற்றும்போது, நாணயம் அதிகரித்து விடுகிறது. உற்பத்தி அதிகரிக்காவிட்டால், சாமான்களின் விலை ஏறத்தான் செய்யும். சண்டை நிலமை காரணமாக ஏற்பட்டிருக்கும் இதர விஷயங்களும் இந்த நிலமையை இன்னும் மோசமாக

மாக்குகின்றன. விவசாயப் பொருள்களின் விலையை கட்டுப்படுத்தும்போது இந்த விஷயங்களை யெல்லாம் கவனிக்கவேண்டும். இல்லாவிடில் விவசாயி அதிக ஆகார பயிர் உற்பத்தி செய்ய முன் வரமாட்டான்.

## சபையின் தீர்மானங்கள்.

### எருவு சப்ளை.

எல்லா விஷயங்களையும் கவனித்து, சபை அதிகப்படி பயிர் உற்பத்திக்கு எருவின் முக்கியத்தைப்பற்றியும் விவசாயிகளுக்கு அதை விநியோகிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் வற்புறுத்தியது. விவசாயிகளை அதிக பயிர் செய்யும்படி தூண்ட இந்திய கவர்மெண்டு, எந்த காரணத்தினாலும் விவசாயப்பொருள்களின் விலை வாசி குறைந்து போகுமானால், தாங்களே ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்கிக் கொள்ளுவதாக உறுதி சொல்லவேண்டும்.

1. எல்லா ஆகார தான்யங்கள் விஷயமாகவும் விலை கட்டுப்பாடு ஏற்படுத்த வேண்டும். பயிர் செய்பவனுக்கு நியாயமான பலன் கிடைக்கும்படி, அவைகளின் மாமூல் விலை, உற்பத்தி செலவில் ஏற்றம், இன்னும் இதர சந்தர்பங்கள் எல்லாவற்றையும் கவனித்து விலைகட்டுபாடு செய்யவேண்டும்.

2. துருப்புகளின் தேவையை ஒரே ஒரு ஸ்தாபனத்தின் மூலம் வாங்க வேண்டும். குறைவுபடும் பிரதேசங்களின் தேவையும் இந்த ஸ்தாபனமே கவனிக்க வேண்டும். மாகாணங்களுக்குள் சாமான்கள் அனுப்ப போக்கு வரத்து வண்டிகள் ஏற்பாட்டை இந்த ஸ்தாபனத்தினிடமே ஒப்படைக்கவேண்டும்.

3. சில்லரை விலைகளையும், பிரதேசங்களின் நிலைமைக்குத்தக்கபடி கட்டுப் படுத்த வேண்டும். ஆகார பயிர்கள் அதிகரிக்க, பயிர் செய்யப்படும் நிலங்களின் விஸ்தீரணம் அதிகமாக வேண்டி, கரம்பான நிலங்களை கணக்கெடுக்கும்படிக்கும் அந்த நிலங்கள் ஏன் பயிர் செய்யப்படாமல் விட்டுவிடப் பட்டன என்பதை ஆராயும் படியும், அவைகளை சீர்படுத்தி பயிர் செய்ய தகுதியுள்ளதாக்கும் ஏற்பாடு செய்யும் படியும், சபை மாகாண, சமஸ்தான கவர்மெண்டுகளை வேண்டிக்கொள்ள தீர்மானித்தது.

எல்லாவித எருவு வஸ்துக்களையும் தீர ஆராய்ந்து, அவைகளை மிக்க பயன் தரும்படி உபயோகிக்க வழிகளைத்தேட ஒரு சப் கமிடியை நியமிக்க சபை தீர்மானித்தது. அந்த கமிடி பரிசீலனை செய்யும் வரையில், மாகாண, சமஸ்தான கவர்மெண்டுகள், "கம்பாஸ்டு," செய்வதையும், நகரங்களின் குப்பை சத்தைகளை எருக்களாகவும், சரஸமான விலைக்கு விவசாயிகளுக்கு புண்ணாக்குகளை விற்கவும் ஏற்பாடு செய்யும்படி வேண்டிக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. காய்கறிகளும், முட்டைகளும், தேசத்தில் காய்கறிகள், முட்டைகள் குறைந்திருப்பதை போக்க, சபை மாகாண, சமஸ்தான கவர்மெண்டுகளை, எல்லா இடங்களிலும் அதிகப்படியாக, காய்கறிகளை பயிர்செய்யும்படி ஜனங்களை தூண்டவும், அதற்காக, இலவசமாக விதைகள் கொடுப்பது, குறைந்த தண்ணீர் தீர்வை, விற்பனை செய்ய ஏற்பாடுகள் முதலிய சலுகைகள் காண்பிக்கும் படிக்கும் வேண்டிக்கொள்ள தீர்மானித்தது. மேலும் நகரங்களுக்கு சரிவர பால் சப்ளை செய்யப்பட வேண்டும் என்றும் அதற்கு இடைஞ்சல் ஏற்படும்படி ஒரு வித கட்டணம் முதலிய மற்றவைகள் விதிக்கக் கூடாது என்றும் சிபார்சு செய்தது. அரிசி இறக்குமதி குறைந்து போன காரணத்

தால் ஏற்பட்டிருக்கும் அரிசி பஞ்சத்தைப் போக்க, அரிசிக்குப் பதில் தினைகளை அதிகம் உட்கொள்ளும்படி தூண்டவும் விவசாய இலாகா, ஆகார போஷாப்பு ஆராய்ச்சி நிபுணர்கள் மூலமும், அரிசி, காய்கறிகள், தினைகள் இவை தகுந்த அளவில் கொண்ட ஆகாரத்தை, வெறும் அரிசி ஆகாரத்திற்குப் பதில் உட்கொள்ளும்படி ஜனங்களை தூண்ட பிரசாரம் செய்யவேண்டும்படி தீர்மானித்தது.

போக்கு வரத்து சாதனங்களில் தடையேற்பட்டிருப்பதை யுத்தேசித்து, மாகாண, சமஸ்தான கவர்மெண்டுகளை அதிகப் படியாக மாட்டு வண்டிகள், போட்டுகள், இவைகள் மூலம் ஆகாரப்பொருள்கள் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யும்படிக்கும், அதிக தூரம் செல்ல வேண்டியிருக்கும் பொருள்களை வரிசையாக அங்கங்கே மாட்டுவண்டிகள் அமைத்து, ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றி மாற்றி கொண்டுபோக ஏற்பாடு செய்ய சிபார்சு செய்ய தீர்மானித்தது.

பயிர் செய்பவர்களின் பூரண ஒத்துழைப்பையும்பெற, இங்கிலாந்தில் உள்ள தேசபோர் விவசாய கமிடிகள் போல, கிராமத்திலிருக்கும் வயது முதிர்ந்தவர்களைக் கொண்ட, கிராம, தாசில், ஜில்லா, மகாண கமிடிகளை ஏற்படுத்தும்படி சிபார்சு செய்ய தீர்மானித்தது.

சண்டை காரணமாக ஏற்பட்டிருக்கும் இரைச்சி தேவைக்கு, நாட்டின் கால் நடைகளின் விருத்தியை தடை செய்யாமலிருக்க, 10 வயதிற்குட்பட்ட வேலை செய்யும் எருதுகள், கரவைப் பசுக்கள், சினையாய் இருக்கும் பசுக்கள் இவைகளை கொல்லுவதை தடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி கவனிக்கும்படி சிபார்சு செய்ய தீர்மானித்தது.

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

---

**அதிக ஆகார உற்பத்தி இயக்கம் மேலும் : சலுகைகள்.**

மேட்டூர் திட்ட பிரதேசங்களில், இரண்டாம் போகம், முதல் போக தீர்வையில் பாதி, ஆனால் 5 ரூபாய்க்கு குறையாமல், செலுத்தி பயிர் செய்யலாம். சில குறிப்பிட்ட பிரதேசங்களில் இந்த கடைசி குறைவு தொகை இருக்கவேண்டியதை எடுத்து விட்டார்கள். இப்போது அந்த பிரதேசம் முழுவதும் இந்ததடை நீக்கப் பட்டுவிட்டது.

கவர்மெண்டு காரியாலயங்களின் காம்பௌண்டுகளில் ஒரு வித கட்டணம் இல்லாமல் ஆபீஸ் கீழ் சிப்பந்திகள் ஆகாரப்பயிர்கள் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இஷ்டபடாவிட்டால், நிலமில்லாதிருக்கும் ஏழைகள் செய்யலாம். கவர்மெண்டார் பயிர் செய்ய ஏற்படும் செலவுக்காக ஒரு சிறிய தொகையை முன்பணமாக கொடுத்து அறுவடைக்குப் பின் திருப்பி பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

* * *

**கிராம நன்மை ட்ரஸ்டு நிதி—ஹைதராபாத்.**

கிராம பிரதேசங்களின் அபிவிருத்திக்காக விவசாய, சுகாதார நன்மைக்கான நடவடிக்கைகளைத்தவிர, குடிசைத் தொழில்களை விருத்திசெய்ய, நிஜாம் கவர்மெண்டார் கிராம நன்மை ட்ரஸ்டு நிதி ஒன்று ஏற்படுத்தி, அதில் 3 லக்ஷம் ரூபாய் போட்டிருக்கிறார்கள். பசலி 1356 வரையில் வருஷத்திற்கு மேலும் 1½ லக்ஷம் சேர்க்கப்பட்டு, 9 லக்ஷம் மொத்தம் சேர்ந்தபின், திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்படும்.

நிஜாம் கவர்மெண்டு தக்காவி கடன்களுக்காக இந்த வருஷம் 6 லக்ஷ ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள்.

* * *

**பாதி தீட்டப்பட்ட அரிசி.**

பூரா தீட்டின அரிசிக்குப்பதில் பாதி தீட்டப்பட்ட அரிசியை உபயோகப் படுத்தும்படி தூண்ட கவர்மெண்டார் முயற்சி செய்து வருகிறார்கள். அப்படி செய்தால் அரிசி 4 சத விகிதம் அதிகப்படி காண்பதுடன், தேகத்திற்கும் நன்மை தரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

**கிடைக்கக்கூடிய தேனை ஏன் உபயோகிக்ககூடாது ?**

இந்தியாவில் நாம் கிடைக்கக்கூடிய தேனில் 10 சதவிகிதம் கூட சேகரிப்பதில்லை என்று தெரிகிறது. ஏன் இன்னும் 10 சத விகிதம் அதிகப்படியாக உபயோகிக்கக் கூடாது, என்று அகில இந்திய தேனீ சங்கக் காரியதரிசி கேட்கிறார். சில மேல் நாடுகளில் ஜனங்கள் சர்க்கரையை விட்டு விட்டு தேனை உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சர்க்கரையை விட தேன் சுலபமாக ஜீரணம் செய்யக்கூடியது. தேகாரோக்கியத்திற்கும் நல்லது.

**கொய்னா பஞ்சம்.**

இது மலேரியாகாலம். இந்தியாவில் அதைத்தடுக்க கொய்னா உபயோகிப்பது சகஜமாகி விட்டது. சில இடங்களில் கவர்மெண்டார் அதை இலவசமாக விநியோகம் செய்தார்கள். ஆனால் கொஞ்ச காலமாக அது குறைவுபட்டு விட்டது. ஒரு பவுண்டு 55 ரூபாயிலிருந்து அதன் விலை 600 ரூபாய்க்கு ஏறி விட்டது. சமீபத்தில் அதிக சரக்கை ஜனங்களுக்காக விடுவித்திருப்பதாக இந்திய கவர்மெண்டு அறிவித்தது.

* * *

யுத்த தளவாடங்களின் விலை உனக்குத்தெரியுமா ?

| | | | |
|---|---|---|---|
| ஒரு குண்டு | 1 அணா | மெஷின் துப்பாக்கி | 1,800 ரூ. |
| ஒரு மணல் மூட்டை | 2 அணா | பாரேஜ பலூன் | 10,000 ரூ. |
| ஒரு சிறிய துப்பாக்கி | 50 ரூபாய் | விமான எதிர்ப்பு சிறிய துப்பாக்கி | 40,000 ரூ. |
| ஒரு பெரிய துப்பாக்கி | 100 ரூபாய் | சண்டை ஆகாயச் விமானம் | 1,40,000 ரூ. |
| குண்டு போடும் விமானம் | | ... | 2,70,000 ரூ. |
| டிஸ்ட்ருயர் கப்பல் | | ... | 60,00,000 ரூ. |
| க்ரூய்சர் கப்பல் | | .. | 2,50,00,000 ரூ. |
| சண்டைக் கப்பல் | | ... | 10,50,00,000 ரூ. |

* * *

ஸ்தல ஸ்தாபன கால நீடிப்பு (சட்டம்).

மேர்படி சட்டத்தின் கீழ், கலைக்கப்படும் ஜில்லா போர்டுகள், முனிசிபாலிடிகள் இவைகளின் அங்கத்தினர் எண்ணிக்கையை குறைக்கவும், நியமனம் செய்யவும், சண்டை முடியும் வரையிலும், அதன் பின்னிட்டு 12-மாதம் வரையிலும் அவர்களை பதவியில் வைக்கவும், கவர்மெண்டு அதிகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

அதிக ஆகார உற்பத்தி செய்ய அனுகூலமாக இருக்கும் பொருட்டு பச்சைத்தழைக்கு விதித்து வந்த கட்டணம் இப்போது பாதியாக்கப்பட்டுவிட்டது.

* * *

**கிராமாபிவிருத்திக்கு இந்தியா கவர்மெண்டு மான்யம்.**

இந்தியா கவர்மெண்டு கிராமாபிவிருத்திக்காக கொடுத்த மான்யமானது இந்த வருஷமே செலவு செய்யப்படவேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறது.

# வேண்டுகோள்.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பது யாதெனில், அவர்களது சந்தா தொகையை தவணைபடி கட்டாவிடில், நமது பத்திரிகை ஜனவரி மாதம் வி. பி. பியில் அவர்களுக்கு அனுப்பப்படும். ஆதலால் அப்படி அனுப்பா விட்டால் அதை தயவு செய்து வாங்கிக்கொள்ளுமாறு கோரப்படுகிறது. போஸ்டல் அதிகாரிகள் வி. பி. பியை போஸ்டாபீஸில் அதிக நாள் வைத்துக்கொள்ளமாட்டார்கள். ஆதலால் சந்தாக்காரர்கள் தயவு செய்து இச் சிறிய தொகை ரூ. 3—3—0 தயாராக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. வியன்ஞ,

சேகரட்ரீ.